தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 | நவம்பர் 2022 | கனி 12

ஆசிரியர்
B. அர்ஜுனன்

MONTHLY
THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3;16

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 35
தலைப்பு : இந்த இரகசியம் பெரியது - This is a great mystery
வேத வாசிப்பு : எபே.:21-33

1. தேவபக்திக்குரிய இரகசியம் - 1தீமோ.3:16
2. கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்தார் - எபே.5:25
3. கர்த்தர் சபையை காப்பாற்றுகிறார் - எபே.5:29







மாத இதழுக்கான சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

Contact Us: 94435 58041

the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509









**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 22 நவம்பர் - 2022 கனி - 12


**ஆசிரியருரை**

## எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது
## Our Sufficiency Is From God



**அ**ப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது; "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" என்கிறான் (2கொரி.3;5). ஆம், அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரே அவர்களை அழைத்தும் இருக்கிறார். பிதாவாகிய தேவன் அவர்களைத் தகுதிப்படுத்தியிருக்கிறார். அவர்கள் தங்களைத் தாங்களே தகுதிப்படுத்திக் கொள்ளவில்லை. எங்களால் எல்லாம் கூடும் என்று சொல்லவுமில்லை. சகல அதிகாரமும் உடைய ஆண்டவருடைய ஊழியக்காரர்களாக, சீஷர்களாக, அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டார்கள்.

ஒருமுறை பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்கு போகும்போது ஒரு சப்பாணி குணமாக்கப்பட்டான்; அந்த "குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக்கொண்டிருக்கையில், ஜனங்களெல்லாரும் பிரமித்து, சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே அவர்களிடத்திற்கு ஓடிவந்தார்கள். பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?" என்று கேட்டார்கள் (அப்.3:11,12). இப்படிப்பட்ட அற்புதத்தை அவர்கள் பார்த்தவுடன் மிகவும் ஆச்சரியத்துடன் பேதுருவையும், யோவானையும் நோக்கிப்பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்களிடத்தில் எந்தவிதமான சக்தியோ அல்லது அவர்களுடைய பக்தியுள்ள காரியத்தினாலோ இந்த சப்பாணி சுகமாக்கப்படவில்லை. ஆனால் இவர்களால்தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது என்ற ஆச்சரியத்தோடு அவர்களை நோக்கிப்பார்த்தனர். அநேகர் தங்கள் மூலமாகவே எல்லாம் நடைபெறுகிறது என்று சொல்லி தன்னுடைய பெயர் பிரஸ்தாபத்தை விரும்புகின்றனர். ஆனால் அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய நாமத்தையே உயர்த்த விரும்பி இயேசுவின் நாமமே இந்த சர்வாங்சுகத்தை இவனுக்குக் கொடுத்தது என்றனர்.

மேலும் "அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்" என அப்.5:12-ல் வாசிக்கிறோம். கர்த்தர் பரமேறி சென்றபின்பு அப்போஸ்தலர்களைக் கொண்டு தேவன் பெரிய காரியங்களை புதிய ஏற்பாட்டு சபையின் துவக்க காலத்தில்

செய்துகொண்டுவந்தார். அதைப்போல பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்துகொண்டுவந்த நாட்களில் ஒரு சம்பவம் நடந்தது; "பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி, பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள். மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப்பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்" என்றார்கள் (அப்.14:11,12,15).

பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் இருந்த அவனை பவுல் உற்றுப்பார்த்து அவனுக்கு இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் உண்டென்று கண்டு; நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்தத்தோடே சொல்ல அவன் குதித்தெழுந்து நடந்தான் (அப்.14:9,10). இந்த அற்புதத்தைக் கண்ட ஜனங்கள் மனுஷர்கள் தேவர்கள் ரூபமெடுத்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களுக்கு பூமாலைகளையும் எருதுகளையும் பலியிடும்படியாக கொண்டுவந்தார்கள். இந்த புகழ்ச்சியை எற்றுக்கொள்ள மனமில்லாத பவுலும் பர்னபாவும் கூட்டத்திற்குள்ளே தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு ஓடி நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள் தானே என்று சொன்னார்கள். இன்றைக்கு இப்படி சொல்லுகிறவர்களை நாம் பார்த்திருக்கிறோமா? எப்பொழுதும் தங்களைப் புகழவேண்டும் என்று எதிர்பார்ப்போடு காத்திருக்கிறவர்களைத்தான் பார்க்கிறோம். மனுஷரால் வரும் புகழ்ச்சியை அப்போஸ்தலர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால்; அவர்கள் அதற்கு தகுதியானவர்கள் என்றோ அல்லது எங்களால் எல்லாம் செய்யமுடியும் நாங்கள் அப்போஸ்தலர்கள் என்றோ எங்கும் தங்களை அவர்கள் உயர்வாக பேசிக்கொள்ளவுமில்லை, கருதிக்கொள்ளவும் இல்லை.

கிதியோன் என்று சொல்லக்கூடிய தேவ மனுஷனை நீங்கள் அறிவீர்கள். அவனை இஸ்ரவேலை இரட்சிக்கும்படியாக கர்த்தர் தெரிந்துகொண்டார். அப்பொழுது அவன்; "ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்" (நியா.6:15). ஆனால் கர்த்தர் கிதியோனைப் பெலப்படுத்தி உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்று சொல்லி அவனைத் தகுதிப்படுத்தி அனுப்பினார். அவன் முன்னூறுபேரைத் தெரிந்துகொண்டு அவர்களைக் கொண்டு இஸ்ரவேலை ரட்சித்தான். தகுதியற்றவர்களைத் தேவன் தகுதிப்படுத்துகிறார் என அறிகிறோம்.

மேலும் பவுல் சொல்லும்போது; எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது என்கிறார். அப்போஸ்தலர்களைப் பெலப்படுத்தியவர் கர்த்தர். "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்.1:8). அந்தப்படியாக அப்போஸ்தலர்களைக் கொண்டு தேவன் முதல் நூற்றாண்டு காலத்தில் பெரிய காரியங்களைச் செய்தார்.

அவர்கள் கர்த்தருடைய கட்டளையின்படி உலகமெங்கும் புறப்பட்டுச் சென்று சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்து, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக்குறித்து பலமாய் சாட்சிகொடுத்தார்கள். எருசலேம் துவங்கி பல இடங்களில் கர்த்தருடைய சபை உருவானது.

மேலும் பவுல் சொல்லும்போது; எங்களுக்குத்தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்ட வர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்"என்றார்கள் (1கொ.4:9). இன்று அப்போஸ்தலர்கள் இருக்கிறார்களா? இல்லை. இவர்களே கடைசி அப்போஸ்தலர்கள். இவர்களுக்கு பின்பு எந்த ஒரு அப்போஸ்தலர்களையும் ஆண்டவர் தெரிந்துகொள்ளவில்லை, ஏற்படுத்தவும் இல்லை. வேதத்தில் எங்கும் சொல்லப்படவுமில்லை. ஏனெனில் ஆரம்பமுதல் இயேசுவின் உயிர்த்தெழுதல் வரை இருந்தவர்கள் இவர்களே எனக்காண்கிறோம். "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" என்கிறான் பவுல் (2கொரி.4:7).

பிதாவாகிய தேவனே இவர்களை தம்முடைய ஊழியத்திற்குத் தகுதிப்படுத்தினார். அந்தப்படியாக அவருடைய அநாதி திட்டத்தின்படியே இவர்களை எடுத்துப் பயன்படுத்தினார். இவர்கள் இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றவர்களாயிருந்தனர். இன்றைக்கு பதவி, பட்டங்கள் என்று ஜனங்கள் அடித்துக்கொள்ளுகின்றனர். இவர்கள் அப்போஸ்தலர்களுக்குரிய பட்டங்களைப் பெற்றும் தங்களை உயர்வாக எண்ணிக்கொள்ளவில்லை. தேவனையே மகிமைப்படுத்தினார்கள். உங்களுடைய தகுதி எவரால் உண்டானது? உங்களைத் தகுதிப்படுத்திய கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறீர்களா? அப்படி உண்மையுள்ளவர்களாக இருந்து அப்போஸ்தலர்களைப்போல பாடுபடும்போது வாடாத ஜீவகிரீடத்தை அவரால் பெற்றுக்கொள்வீர்கள்.

இஸ்ரவேலை இரட்சிக்கும்படி மோசேயை தேவன் தெரிந்துகொள்ளும்போது; "நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார். அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் என்றான். அதற்கு அவர்; நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்" (யாத்.3:10-12).

மோசே தன் மாமனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது தேவன் அவனை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தார். அப்பொழுது அவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவர நான் எம்மாத்திரம் என்றான். இப்படிச் சொன்ன மோசேயை தேவன் அழைத்து அவனைத் தகுதிப்படுத்தினார். இந்த தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது. அன்பானவர்களே, நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாக செய்கிற தேவன் நம் தேவன். அவர் உங்களையும் பெலப்படுத்தி வழிநடத்த அறிந்திருக்கிறார். நீங்கள் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவும், அவருடைய வேலைகளைச் செய்யவும் ஆயத்தமாக இருங்கள்.

மேலும், அப்.பவுல் சொல்லும்போது அவரே எங்களை தகுதியுள்ளவராக்கினார் என்கிறான். ஆம் அவரே அவர்களைத் தகுதிப்படுத்தினார் எனக் காண்கிறோம். "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" என்கிறான் (1கொரி.2:12). இன்றைக்கு ஆவியைப் பெற்றோம், ஆவியைப் பெற்றோம் என்று சொல்லிக்கொண்டு ஒரு சாரார் தம்பட்டம் அடித்துக்கொண்டு திரிகிறார்கள். அப்போஸ்தலர்கள் எந்த ஆவியைப் பெற்றார்கள்? ஆவிக்குரியவைகளை அறியும்படி ஆவியானவர் கொடுக்கப்படுகிறார். அந்த ஆவியானவருடைய உதவியுடன் அநேக நிருபங்களை எழுதியிருக்கிறார்கள். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது என்ற வசனத்தின்படி எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் அனுப்பப்பட்ட ஆவியை வாக்குத்தத்தின்படி பெற்றுக்கொண்டார்கள். நாம் விசுவாசிக்கும்போது ஆவியானவரால் அவருக்குள் முத்திரையிடப்படுகிறோம். அப்படி முத்திரையிடப்பட்டவன் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுப்பான். இதினாலோ ஆவிக்குரியவர்கள் இன்னாரென்று நாம் அறிந்துகொள்ளலாம்.

மேலும், அப்போஸ்தலர்கள் சொல்லும்போது; "நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்" என்றான் (1கொரி.3:9). அப்போஸ்தலர்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாக இருந்தார்கள். அதற்கு அவர்களைத் தகுதிப்படுத்தினவர் தேவன். தங்களைத்தாங்களே தகுதிப்படுத்திக்கொண்டு வேலைபார்க்கிறவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லமுடியாது. "உங்கள்பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்" என்று பவுல் சொல்லுகிறான் (கொலோ.1:26). தேவனாலே இந்த தகுதி ஏற்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவும் தம்மைத்தாமே உயர்த்தவில்லை பிதாவாகிய தேவனே அவரை உயர்த்தினார். ஆம், பிரியமானவர்களே, தேவன் ஆதி அப்போஸ்தர்களை தகுதிப்படுத்தி தம்முடைய ஊழியத்திற்கு தெரிந்துகொண்டார். இன்றைக்கு உங்களுக்கு ஒரு தகுதியிருக்குமானால் அது தேவனால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒன்றா அல்லது அந்த தகுதிக்கு நான் ஏற்றவனாயிருக்கிறேனா என்று வசனத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். உங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கட்டும்.

**எல்லாவற்றையும் அனுபவிக்க நமக்கு அதிகாரம் உண்டா?**

பவுல் இதற்கான விடையை அளிக்கிறான். "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது" என்கிறான் (1கொரி.10:23). தான் ஒரு அப்போஸ்தலனாக இருந்தபோதும். அந்த அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல் தன்னைத் தானே எல்லாருக்கும் அடிமையாக ஒப்புக்கொடுத்தான். ஆண்டவர் சொல்லுகிறபடி முதன்மையானவன் ஊழியக்காரனாயிருக்கவேண்டும். அப்பொழுதே முதன்மைக்குரிய தகுதியை பெறுகிறோம். அதிகாரம் இருக்கிறது என்று சொல்லி மேட்டிமைகொள்ளக்கூடாது. அது பக்திவிருத்தியையும் உண்டாக்காது. இதில் தன்னை முழுதுமாக ஒப்புக்கொடுத்தவன் அப்போஸ்தலனாகிய பவுல். பவுலைப்போல நீங்களும் ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# புகைபிடித்தல்
# Smoking

-J.C.Choate



"பழைய பாவ மனிதன் களையப்படுதல்" என்ற பாடங்களின் தொடர்பாக நாம் ஏன் புகைபிடித்தல் அல்லது எந்த வடியிலும் புகையிலை பயன்படுத்துதல் குறித்த பாடப்பகுதியினை ஏன் இணைக்க விரும்புகிறோம்? ஒரு சமயத்தில், அதிக நாட்களுக்கு முன்பு அல்ல, புகைப்பிடித்தலுக்கு எதிராக அதிகம் பேசப்படவில்லை என்றும் ஒரு சிலர் மட்டுமே இது தவறு எனக் கண்டறிந்து குற்றப்படுத்தினர். ஆனால் கடந்த ஒரு சில வருடங்களில் இதற்கு எதிராக ஒரு பெரிய இயக்கம் உருவாகியுள்ளது என்று கூறுவதற்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இவைகள் மதம் சம்பந்தப்பட்ட மக்கள் மாத்திரம் அல்ல ஆனால் சுகாதார அமைப்புகளும், எண்ணற்ற மருத்துவர்களும் மேலும் உலகின் அநேக அரசாங்களும் கூட ஒவ்வொரு சிகரெட் பாக்கெட்டுகளிலும் **"சிகரெட் புகைப்பது உடல் நலனுக்குக் கேடு"** என்ற அறிக்கையை அச்சிடுவது அவசியம் என மிக நன்றாகவே அறிவுறுத்துகின்றன. இப்போது அது ஒன்றுமில்லையா? அது தீங்கு விளைவிக்கும் என்று சொல்லவில்லை, ஆனால் அது ஒருவரின் ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிக்கும். இப்போது நாம் அதை அறிந்தவுடன், சரியானவற்றை சிந்திக்கும் நபர் என்ன சிகரெட் புகைக்கவும், புகையிலை மெல்லவும் விரும்புவார்? இருப்பினும், மருத்துவ கண்டுபிடிப்புகள் இருந்த போதிலும் நீங்கள் நன்கு அறிந்தபடி பலர் சிகரெட்டுகளை வாங்கி புகைக்கிறார்கள். இது படிப்பறிவில்லாதவர்களால் செய்யப்படுவதில்லை, மாறாக, சமூகத்தின் குறுக்கு வெட்டு மற்றும் இளைய தலைமுறையினரால் அதிகரித்து வரும் எண்ணிக்கையுடைவர்களால் செய்யப்படுகிறது. அது வருத்தமாக இருக்கிறது, இல்லையா? எல்லாவற்றிக்கும் மேலாக, இந்த எச்சரிக்கைகள் இருந்த போதிலும், புகைபிடிப்பதைத் தொடரும் இவர்கள் நிகழும் வாய்ப்புள்ள எல்லாவற்றிலும் இறுதியாக இந்த கெட்ட பழக்கத்திற்கு பெரும் விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

மக்கள் கார் விபத்து ஏற்படுவதற்குக் காரணம் கூறுவதைக் போலவே, புகைபிடிப்பதால் ஏற்படும் ஆபத்து குறித்தும் அதிகம் காரணம் கூறுகின்றனர். அவர்கள் எப்போதும் இது மற்ற சக நபராக தான் இருக்கும், ஆனால் இது ஒருபோதும் தங்களுக்கு நேரிடாது என்று நினைக்கிறார்கள். ஆனால் இப்பேர்பட்ட காரணத்திற்கு நேர்மாறாக இது அதிகமாக புகைபிடிப்போருக்கே சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ நடக்கிறது. புகைபிடித்தலோடு சம்பந்தமுடைய அநேக வியாதிகள் இருக்கின்றன. அவைகள்: இருதயக் கோளாறு, நுரையீரல் புற்றுநோய், உணவுக் குழாய் புற்றுநோய், ஆஸ்துமா, திசுக்களில் காற்றுப் பரவிய நிலை, சுவாசக் கோளாறுகள், மேலும் இதுபோன்ற அநேக வியாதிகள் உள்ளன. இப்போது இவ்வியாதிகளில் ஏதேனும் ஒன்றினால் உரிய காலத்திற்கு முன்னே உங்கள் வாழ்வை முடித்துக்கொள்ள விரும்புகிறீர்களா? ஐக்கிய நாட்டில் ஐந்தில் ஒருவர் புகைபிடிப்பதால் மரிப்பதாகவும், மேலும் மூன்றில் ஒருவர் புற்று நோயினால் மரிப்பதாகவும் காரணம் கூறப்படுகிறது. புகைபிடிக்கும் பழக்கத்தைத் தொடர தீர்மானிக்கப்பட்டவர்களாக இருப்பீர்களென்றால், உங்களுடைய வாழ்வின் இறுதி வருடங்களை புகைபிடித்தலுக்கு எதிரான எச்சரிப்புகளைப் பொருட்படுத்தாமல் இவ்வகையான ஒன்றோ அல்லது பல வியாதிகளால் அவதிப்பட விரும்புகிறீர்களா?

நீங்கள் தொடர்ந்து புகைபிடிப்பீர்களானால், மரணத்துக்கேதுவான இவ்வகை வியாதிகள் ஒன்றினால் உங்கள் வாழ்வை முடித்துக் கொள்ளுகிறீர்கள். நீங்கள் உங்களையே தவிர மற்ற ஒருவரையும் குற்றப்படுத்த முடியாது, நீங்கள் நீண்டகால மரணத்துக்கேதுவான வியாதியினால் அவதிப்படுகையில், எச்சரிக்கைகளுக்குச் செவி சாய்க்கவில்லை என்று ஆழமாக வருந்துவீர்கள் என்று நான் நிச்சயித்திருக்கிறேன்.

ஆனால், வேதாகமத்தில் புகைபிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதாக எங்கே வாசிக்க முடியும்? என அறிய சிலர் விரும்பலாம். இயற்கையாகவே வேதாகமம் புகைபிடித்தல் அல்லது புகையிலை மெல்லுதல், இது போன்ற பலகாரியங்களை குறிப்பிடவில்லை, ஏனென்றால் தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் மக்கள் சிகரெட் புகைத்துக் கொண்டிருக்கவில்லை. இன்னும், திட்டவட்டமாக புகைபிடித்தலை அல்லது சிகரெட் வடிவில் புகையிலை பயன்படுத்துதலை சுருட்டு குடித்தலை, குழாய்களில் புகைத்தலை, மெல்லுதலை அல்லது மூக்குப்பொடி உறிஞ்சுதலை கண்டனம் பண்ணும் விதமாக சில எண்ணிக்கையிலான விதிகள் வேதாகமத்தில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பவுல் கலாத்தியர் 5:19-21 ல் மாம்சத்தின் கிரியைகளைப் பட்டியலிடும்போது **(விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபோதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள்), "...மேலும் இப்படிப்பட்டவைகள்"** என்று சொல்லி முடித்தான். மனிதர்கள், காலப்போக்கில் தாங்கள் செய்த மாம்சத்தின் புதிய கிரியைகளைக் கூட தங்களுக்குத் தாங்களே கண்டுபிடிப்பார்கள் என்று அறிந்த அவன், வெளிப்படையாக எல்லா பாவங்களையும் குறிப்பிட முயற்சிக்கவில்லை.

கலாத்தியர் 5:19-21 ல் பட்டியலிடப்பட்டுள்ள பாவங்களில் ஒன்று கொலை செய்தல். ரோமர் 13:9ல் பவுல், **"கொலைசெய்யாதிருப்பாயாக"** எனக் கட்டளையாகப் பேசுகிறான். நிச்சயமாக ஒருவன் பிறரைக் கொல்லக்கூடாது என்றால்; அவனைக் கட்டுப்படுத்தும் வாழ்நாள் பழக்கவழக்கங்களால் அவன் தன்னைக் கொன்ற குற்றமாக இருக்கக்கூடாது. யோவான் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்கிறவர்களை பார்த்து ஒருநாளில் **"....இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவார்கள்..."** (வெளி.21:8) என்று எச்சரிக்கிறான்.

பவுல் மேலும் நமது சரீரங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்றும் தேவனுடைய ஆவியானவர் நம்மில் வாசமாயிருப்பதனால் நம்மை தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் வைத்துக்கொள்ளும்படிக்கு நாம் நம்முடைய ஆளுமைத்திறனில் ஒவ்வொன்றையும் செய்யவேண்டுமென நமக்குத் தெரிவிக்கிறான்: **"நீங்கள் தேவனுடைய ஆலயமா யிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்"** (1கொரி3:16,17). நாம் இந்த கண்டிப்பான எச்சரிக்கைக்குச் செவிசாய்க்கிறோமா?

## நான் யார்? – Who Am I?



- நான் பெத்தானியா கிராமத்தான்
- இயேசு எங்களில் அன்பாயிருந்தார்
- நான் வியாதிப்பட்டு மரித்துப்போனேன்
- இயேசு எனக்காக கண்ணீர் விட்டார்
- இயேசுவிடம் என் சகோதரி நான் மரித்து நாலுநாளாயிற்று என்றாள்
- இயேசு என்னை பெயர் சொல்லி எழுப்பினார்
- நான் உயிரோடு எழுப்பப்பட்ட பின்பு இயேசுவோடு பந்தியிருந்தேன்

பெண்கள் பகுதி

## பண்டிகைகளின் நோக்கம் –The Purpose of the Feasts

*-Betty*



பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து தேவனால் பரிசுத்த மடைவதற்கும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்ற நினைப்பூட்டுகிறவைகள் மாத்திரமல்ல என நாம் உணருகிறோம்; அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயங்களாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்: இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. ‘‘ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்’’ (1கொரி.11:26).

**கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்**

இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?

‘‘வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, ‘‘பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்....’’ (லூக்.22:14-16,19,20).

முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:

‘‘நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்’’ (யோவா.6:51-54) என்றார்.

சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம். உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில் தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தமக்கு மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ள

முடியாத இப்பேர்பட்ட **சூசகமான** ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை, மேலும் "…..அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினை தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். **அவர் தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்.** அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் **பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக்** குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

**உடன்படிக்கையின் அப்பம்**

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், "..வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது…"(மத்.26:26) என்றார்.இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக் கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக்.22:19).

(2) "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து…" (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன் படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்ளுகின்றனர், மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே தொந்தரவு ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவு கூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம், அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ….. அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ….. தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" (1கொரி.11:28,26).

(4) "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; …." (யோவா.6:54).

(5) "ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்" (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு "சடங்காக" நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவு மிருக்கிறது.நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**

## வேத அறிவுப்போட்டி 264-ன் விடைகள்

1. ஆராய்ந்தெடுத்துக்கொள்ளப்பட்டது - ஒப.6
2. ஆம் - தீத்து 3:7
3. யோனா - யோனா 4:10
4. பவுல், பிலேமோனுக்கு - பிலே.20
5. மீகா - மீகா 7:9
6. பெலவீனமுள்ள - எபி.7:28
7. நாகூம் - நாகூ.1:13
8. கொடாது - யாக்.3:12
9. பூமி - ஆபகூ.3:3
10. பேதுரு - 1பேது.5:13

### சரியான பதில் எழுதியவர்கள்

1. S. சாந்தக்குமாரி - நாசரேத்
2. Mrs. ஹெத்சி செல்வின் - சென்னை
3. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
4. J. செல்வராஜ் - தூத்துக்குடி
5. Mrs. ரூபவல்யா - நாசரேத்
6. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
7. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
8. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
9. R. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
10. Mrs. ஜெனி தர்மராஜன் - திருநெல்வேலி
11. P. சந்திராடேனியேல் - திருநெல்வேலி
12. A. ஜெயச்சந்திரன் - மதுரை
13. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
14. S. சந்திரகாந்தா - நெல்லூர்
15. D. அன்புக்கமலம் - காரைக்குடி
16. Mrs. பாலின்மார்ட்டின் - காரைக்குடி
17. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
18. M. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
19. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
20. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
21. Mrs. வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
22. C. அருள்ராஜ் - சென்னை
23. J. ஆலிவ் - கோவை
24. A. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
25. E. அதிசயம் - பனைகுடி
26. T. ராஜாத்தி - கோம்பை
27. D. விஜயகாந்தா - கூத்தம்பாக்கம்
28. J. பிச்சை - விருதுநகர்
29. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
30. Mrs. சந்திராஆல்பர்ட் - திருநெல்வேலி
31. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
32. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
33. A. இம்மானுவேல் விக்டர் - ஈரோடு
34. D. டயனா நேதாஜி - கோடன்குளம்
35. S. செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
36. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
37. Mrs. ஜெயாபாணிஜெபராஜ் - மேற்கு தாம்பரம்
38. Mrs. ஃபிராங்கலினா ஜான் - ஊட்டி
39. Mrs. ஜெபக்குட்டி மோசஸ் - திருநெல்வேலி

## வேத அறிவுப்போட்டி 265-ன் விடைகள்

1. கர்த்தரை - செப்.2:11
2. பேதுரு - 2பேது.3:12
3. ஆகாய் - ஆகாய் 1:9
4. யோவான் - 1யோவா.2:7
5. சகரியா - சகரியா
6. ஆம் - வெளி.20:13
7. மல்கியா - மல்.3:13
8. மன்னியாதிருப்பார் - மத்.6:15
9. யோசேப்பு - ஆதி.50:19
10. யூதாஸ் - மாற்.14:21

### சரியான பதில் எழுதியவர்கள்

1. Mrs. வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
2. D. அன்புக்கமலம் - காரைக்குடி
3. Mrs. ஜேன் தர்மராஜ் - திருநெல்வேலி
4. D. விஜயா காந்தி - கூத்தம்பாக்கம்
5. E. அதிசயம் - பனைகுடி
6. S. செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
7. K.M. சாந்தி - எம்.வாடிப்பட்டி
8. R. பாரதி - கோபி
9. Mrs. ரூபவல்யா - நாசரேத்
10. S. ஜாய் சந்திரகாந்தா - நெல்லூர்
11. A. டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
12. Mrs. பாலின்மார்ட்டின் - காரைக்குடி
13. J. ஆலிவ் - கோவை
14. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
15. R. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
16. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
17. B. ஸ்டெல்லா - திருச்சி
18. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
19. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
20. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
21. J. செல்வராஜ் - தூத்துக்குடி
22. S. சாந்தகுமாரி - நாசரேத்
23. Mrs. சந்திரா ஆல்பர்ட் - திருநெல்வேலி
24. R. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
25. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
26. Mrs. ஜெயாபாணிஜெபராஜ் - மேற்குதாம்பரம்
27. Mrs. தங்கப்புஷ்பம் - நாசரேத்
28. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
29. Mrs. ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
30. J. பிச்சை - விருதுநகர்
31. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
32. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
33. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
34. D. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
35. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
36. Mrs. இம்மாக்லேட் விக்டர்பாபு - அந்தியூர்
37. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
38. Mrs. மேரிஜெயக்குமார் - மதுரை
39. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் - மதுரை
40. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
41. Mrs. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
42. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
43. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
44. T. ராஜாத்தி - கோம்பை

**ஜெபியுங்கள்**



- நவம்பர் மாதத்தை காணசெய்த தேவனுக்கு நன்றிசொல்லி...
- கடந்த மாதக்கூட்டங்களை தேவன் ஆசீர்வதித்தமைக்காக...
- நம் நாட்டிற்காகவும், ஜனங்களுடைய இரட்சிப்புக்காகவும்...

ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

9



## பரிசுத்த வேதாகமத்தில் ஈசாக்கு
## Isaac In The Holy Bible

1. பிறப்புக்கு முன்பே தேவனால் பெயரிடப்பட்டவன் - ஆதி.17:19
2. ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாம் வயது 100 - ஆதி.21:5
3. ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம் - ஆதி.24:63
4. ஈசாக்கு 60 வயதில் ஏசாவையும் யாக்கோபையும் பெற்றெடுத்தான் - ஆதி.25:25
5. கர்த்தருடைய ஆசீர்வாதத்தினால் 100 மடங்கு ஆசீர்வாதத்தை ஈசாக்கு பெற்றான் - ஆதி.26:12
6. பெலிஸ்தர் அவன் பேரில் பொறாமைகொண்டு, துரவுகளையெல்லாம் தூர்த்துப்போட்டார்கள் - ஆதி.26:14
7. ஏசாவின் குடும்பம் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்
8. விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான் - எபி.11:20

8\. ஆபிரகாம் வாங்கிய இடத்தில் ஈசாக்கும் ரெபேக்காளும் அடக்கம் செய்யப்பட்டார்கள் - ஆதி.49:30

10\. ஈசாக்கு 180 வருஷம் உயிரோடிருந்தான் - ஆதி.35:28

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக ராஜ்யத்தில் எவர்களோடே பந்தியிருப்பார்கள்?***

**விடை:** ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு. "அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்" (மத்தேயு 8:11)



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

10




### பரிசுத்த வேதாகமத்தில் யோவான்
### John In The Holy Bible

1. செபதேயுவின் குமாரன் யாக்கோபு அவன் சகோதரன் யோவான் - மாற்கு 1:19
2. இயேசுவுக்கு அன்பாயிருந்தவன் - யோ.21:20
3. இயேசு மறுரூபமாகும்போது அங்கே பேதுரு மற்றும் அவன் சகோதரன் யாக்கோபுடன் அங்கே இருந்தான் - மத்.17:1,2
4. யவீரு வீட்டிற்கு இயேசுவானவர் சென்றபோது அவரோடு பேதுரு யாக்கோபு யோவானும் இருந்தார்கள் - லூக்.8:51,52
5. பேதுருவும் யோவானும் சேர்ந்து செய்த ஊழியம் - அப்.3:1-16
6. எருசலேம் சபையிலே தூண்களாக எண்ணப்பட்டவர்கள் யாக்கோபும், கேபாவும்,(பேதுருவும்) யோவானும் - கலா.2:9
7. சமாரியாவுக்கு எருலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் பேதுருவையும் யோவானையும் அனுப்பினார்கள் - அப்.8:14
8. பஸ்காவை ஆயத்தம் பண்ண பேதுரு, யோவானை இயேசுவானவர் அனுப்புதல் - லூக்.22:8
9. யோவான் ஜீவவார்த்தையை அறிவிக்கிறார் - 1யோ.1:1
10. பத்மு தீவிலிருந்து வெளிப்படுத்தின புஸ்தகத்தை யோவான் எழுதினான் - வெளி.1:9

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***இயேசுவைக்கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்த அப்போஸ்தலன் யார்?***

**விடை:** யோவான். "நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்..." (வெளி.1:17)



**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



***தற்சோதனை பகுதி - 50***

## 50. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்படியிருக்கும் ?

1. பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார் ☐ வசன ஆதாரம் -----------------
2. அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் இரண்டாவது எழுந்திருப்பார்கள் ☐ வசன ஆதாரம்---------------------------------
3. கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும் ☐ வசன ஆதாரம்------------------------------------------------------------
4. அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோகாது ☐ வசன ஆதாரம் -----------------------------------------------------------
5. மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ ☐ வசன ஆதாரம்-------------------------------------
6. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில் லோத்தின் நாட்களில் நடந்ததுபோல நடக்காது ☐ வசன ஆதாரம்-------------------------------------
7. அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான் ☐ வசன ஆதாரம்-----------------------------
8. அவருடைய வருகையை இயேசு அறிவார் ☐ வசன ஆதாரம்----------
9. மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள் ☐ வசன ஆதாரம்----------
10. இதோ, சீக்கிரமாய் வரமாட்டேன் காலதாமதம் ஆகலாம் என்றார் ☐ வசன ஆதாரம்--------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை:**

**சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள்.**

**மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**


'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

| வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு | - Jim Massey – மொழியாக்கம் சகோ.ரவிஆசீர் |
|---|---|

பாடம் –29

## மூப்பர்களுக்கான தேவனுடைய கட்டளை

### வரைகுறிப்பு




1. மந்தைக்கு மாதிரிகளாயிருங்கள்
2. மந்தையை போஷியுங்கள்
3. மந்தையை மேயுங்கள்
4. கண்காணிப்பு செய்யுங்கள்
5. நன்றாய் விசாரணை செய்யுங்கள்
6. ஆத்துமாக்களுக்காக விழித்திருங்கள்

### கலந்துரையாடல்

**மூ**ப்பர்களுக்கான தகுதிகளை படித்திருக்கிற நாம் இப்பொழுது அவர்களுடைய பணியை குறித்து படிக்கிறோம். இது தேவன் அவர்களுக்கு கொடுத்திருக்கிற கட்டளையில் காணப்படும். இது அவர்களுடைய கடமையை வெளிப்படுத்துகிறது. மூப்பர்கள் செய்ய வேண்டியது என்னென்ன என்பதை நாம் அறிகிறதினாலே மூப்பர்கள் நிச்சயமாக எப்படி இருக்க வேண்டும் என சிறப்பாக நாம் அறியமுடியும்.

1. மந்தைக்கு மாதிரிகளாயிருங்கள். இந்த பாடங்கள் ஏற்கெனவே மூப்பர்களாயிருக்கிறவர்கள் மந்தைக்கு மாதிரிகளாயிருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தியிருந்தாலும், இப்பெரிய சத்தியமானது மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஒரு மூப்பருடைய மாதிரியை பார்க்கிலும் வேறுஎதுவும் அதிக முக்கியமானது அல்ல அவருடைய பணியிலே எல்லா தகுதிகளுமே இந்த அஸ்திபாரத்தை அடிப்படையாக கொண்டவைகளாக இருக்கின்றன. இதன் காரணமாகவே 1பேதுரு 5:3-ல் "தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள்" என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. தன்னை பின்பற்றுகிறவர்களை இறுமாப்பாய் ஆளுகைசெய்கிற ஒரு வழிகாட்டி தேவன் என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறாரோ அதை செய்கிறதில்லை. இராஜாக்கள் ஒரு வேளை தங்களுடைய குடிமக்கள் மேல் பலவந்தம் செய்யலாம், ஆனால் இந்த வகையான ஆளுகை கிறிஸ்தவர்களுக்கான தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறதில்லை. வழிநடத்துதல் மற்றும் பின்பற்றுதலில் தேவனுடைய திட்டமானது மிகப்பெரியதாகவும், உயர்ந்ததுமான திட்டமாகவும் இருக்கிறது. இது பலவந்தத்தை அல்ல அன்பை அடிப்படையாக கொண்டதாகும். முன் மாதிரியாக இருப்பதில் இது பூமிக்குரிய வல்லமையை சாந்திருக்கிறதில்லை. தேவனுக்கேற்ற வழிநடத்துதல் என்பது பின் தொடருகிறவர்கள் தங்களுக்கு வழி காட்டுகிறவர்களை பிரதிபலித்துக்காட்ட விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள். இவ்விதமாக மூப்பர்களா யிருக்கிறவர்கள் முதலாவது தங்களை குறித்தும் பின்பு மந்தையை குறித்தும் எச்சரிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும் (அப்.20:28). அவர்கள், சபையார் மகிழ்ச்சியுடனே பின்பற்றும்படியாக ஒரு சரியான முன்மாதிரியை அவசியம் வெளிப்படுத்த வேண்டும். மூப்பர்களாயிருக்கிறவர்கள் சபையின் மேல் இறுமாப்பாய் ஆளுகை செய்கிறவர்களாக அல்ல மந்தைக்கு முன்மாதிரிகளாக இருக்கவேண்டும்.

2. மந்தையை போஷியுங்கள். மூப்பர்களுக்கான தேவனுடைய இரண்டாவது கட்டளை என்னவென்றால்; "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேயுங்கள்" (1பேது.5:2) என்பதாகும். மூப்பர்களுடைய கடமையில் ஒரு பெரிதான பாகம் சபையை போஷிப்பது அல்லது அதற்கு போதிப்பதாகும். தேவனுடைய வார்த்தை கிறிஸ்தவர்களுக்கான போஜனமாக இருக்கிறது. அது அவர்களை ஆவிக்குரிய வகையில்

கட்டுவிக்கும் (அப்.20:32). புதிதாக மனம் மாறிவர்கள் வளர்ச்சியடையும்படியாக அவர்களுக்கு பால் தேவையாயிருக்கிறது (1பேது.2:2). மற்றவர்களுக்கு நீதியின் வசனத்திலிருந்து பலமான போஜனம் தேவையாயிருக்கிறது (எபி.5:12-14). மூப்பர்கள் புதிய கிறிஸ்தவர்களுக்கும் வளர்ந்த கிறிஸ்தவர்களுக்கும் அவசியம் போஜனம் அளிக்க வேண்டியதாயிருக்கிறது. அவர்கள் தங்களுக்கே வேதவாக்கியங்களை போதிக்கிறவர்களாகவும், நிச்சயமாக போதகசமர்த்தர்களாய் இருக்கவேண்டும் (1தீமோ.3:2). ஆனால் அவர்கள் மற்ற போதகர்களை உற்சாகப்படுத்துவதின் மூலமும், அவர்கள் போதிப்பதற்கான உதவிகளை அளிப்பதின் மூலமும் அவர்களை மேற்பார்வை செய்வார்கள். இது சபைக்கான ஆவிக்குரிய போஜனத்தை அளிக்கும் சிரத்தையுடன் கூடிய ஒரு பொறுப்பாக இருக்கிறது. இது ஒரு குடும்பத்திற்கான போஜனத்தை அளிப்பதைப் பார்க்கிலும் அதிக சிரத்தைக்குறிய காரியமாக இருக்கிறது. இது நன்றாக நடைபெறுமேயாகில், சபை ஆவிக்குரிய வளர்ச்சியடையும், ஆனால் இவ்விஷயத்தில் மூப்பர்கள் தோல்வியடைவார்களேயாகில் சபையானது பலவீனமடைந்து மரித்துப்போகும். சரியான ஆவிக்குரிய ஆராதனையும் கூட ஒரு கிறிஸ்தவனுடைய ஆத்துமாவுக்கு போஜனமாக இருக்கிறது. மூப்பர்கள் விலைமதிக்க முடியாத போற்றிக் காப்பாற்றப்பட வேண்டிய ஆராதனை சேவைகளை அளிக்காம லிருக்கும்போது சபை அங்கத்தினர்கள் வியாதியுள்ளவர்களாக வளர்ந்து ஆவிக்குரிய வகையில் நித்திரையடைகிறார்கள் (1கொரி.11:30). ஆகையால் மந்தையின் ஆத்துமாக் களுக்காக நன்கு ஆயத்தம் செய்யப்பட்ட ஆவிக்குரிய போஜனத்தைக் கொண்டு தேவனுடையமந்தையை போஷிக்கும்படியாக தேவன் மூப்பர்களுக்கு கட்டளையிடுகிறார்.

3. மந்தையை மேயுங்கள். மந்தையை போஷிப்பதற்கும் கூடுதலாக மந்தையை மேய்ப்பதற்கும் மூப்பர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. அவர்கள் மந்தையை மேய்ப்பவர்களாக கவனிக்கவேண்டும். இங்கே "மந்தையை மேய்த்தல்" என்பதற்கான கிரேக்க வார்த்தை உண்மையிலேயே "மந்தையை மேய்ப்பவனாக செயல்படுவதை" குறிப்பிடுகிறது. மந்தையை மேய்ப்பது என்பது அதைக்குறித்து சாந்தமான கவனத்துடன் இருப்பதை குறிப்பிடுகிறது. வேதாகம காலங்களில் மேய்ப்பர்கள் தங்களுடைய செம்மறியாடுகளுடன் வசித்தார்கள். அவர்கள் ஒவ்வொரு பிராணியினுடைய பலவீனத்தையும் அறிந்தவர்களாயிருந்து அன்பு கூர்ந்தார்கள். இரவில் மேய்ப்பனானவன் மந்தையை பாதுகாத்து ஒவ்வொருநாளும் மந்தையின் ஆடுகளை சரியான பாதைகளில் வழிநடத்தினான். அவன் அவைகளை ஒருபோதும் விரட்டிவிடுகிறதில்லை. ஒரு ஆடானது தொலைந்து போகுமேயாகில் அதற்காக அதைத் தேடினான். ஒரு ஆடானது வியாதியாயிருக்குமேயாகில் அல்லது காயம் அடைந்து இருக்குமேயாகில், அவன் அதனுடைய காயங்களில் எண்ணெயை தடவி, பராமரித்து அதை மீண்டும் ஆரோக்கியமான நிலைக்கு கொண்டு வந்தான். மேய்ப்பனானவன் எப்பொழுதும் தன்னுடைய ஆட்டை வழிநடத்தினான்; அவன் அவைகளை ஒருபோதும் விரட்டி விடவில்லை. அவன் எப்பொழுதும் ஆடுகளுக்கு முன்னே சென்று அவைகளை பேர் சொல்லி அழைத்து அவைகளுக்கு நடக்க வேண்டிய வழியை காட்டினான். அவைகள் அவனுடைய சத்தத்தை அறிந்து சந்தோஷமாக அவனுக்குப் பின் சென்றன. ஏனென்றால் மேய்ப்பன் அவைகளிடத்தில் அன்புகூர்ந்து சிறப்பானதையே அவைகளுக்குக் கொடுத்தான் என்பதையும் அறிந்திருந்தன. இவ்விதமான வழிகளிலேயே மூப்பர்களாயிருக்கிறவர்கள் தேவனுடைய மந்தையை ஆவிக்குரியவகையில் மேய்க்க வேண்டும். அவர்கள் ஒவ்வொரு அங்கத்தினரையும் அறிந்தவர்களாயிருந்து அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும். அவர்கள் மந்தையை பாதுகாத்து, வழிநடத்தி மந்தைக்கு தேவையான வைகளை அளிக்கவேண்டும். அவர்கள் வழிதப்பிதிரிந்த ஆடுகளை தேடி கண்டுபிடித்து பலவீனமானவைகளுக்காக கவனம் செலுத்த வேண்டும். மூப்பர்கள் எப்பொழுதும் சபைக்கு முன்பாக வழிகாட்டும்படி இருப்பார்கள், அவைகளை விரட்டி ஓட்டும்படியாக பின்னாக அல்ல. மூப்பர்கள் இந்த விதமாக ஒரு வழியிலே பிராந்திய சபையை வழிநடத்துவார்கள். பிராந்திய சபையானது மகிழ்ச்சியுடனே அவர்களை

பின்பற்றும். இது தங்களுடைய நன்மைக்காகவே என்பதை அறிந்தவர்களாக அதன்படியே செய்ய அறிந்திருக்கிறார்கள். சங்.23 ஐ வாசிப்பதன் மூலமாக தேவன் எவ்விதமாக தன்னுடைய ஆடுகளை மேய்க்கிறார் என்பதையும், எவ்வளவு சாந்தமாகவும், எச்சரிக்கையாகவும் வழிநடத்துகிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம். மூப்பரும் அவருடைய மந்தையின் ஆடுகளை போஷித்து அவைகளை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று மூப்பர்களுக்காகவும் இதை குறிப்பிடுகிறார். தேவனுடைய மந்தையை மேய்க்கும்படி அவர்களுக்குக் கட்டளையிடப் பட்டிருக்கிறது.

4. கண்காணிப்பு செய்யுங்கள். 1பேது.5:2 மூப்பர்களுக்குச் சொல்கிறது "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்..." கண்காணிப்பு செய்யுங்கள்" என்று இங்கே மூப்பர்களுக்கு கண்காணிப்பு செய்வதோடு அந்த கண்காணிப்பை சரியான நோக்கத்தோடும், ஒரு ஆயத்தமனதோடும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கட்டளையிடப்படுகிறது. "மூப்பர்" மற்றும் "கண்காணி" என்ற பெயர்கள் மூப்பர்களாயிருக்கிறவர்கள் சபையை காண்காணிப்பு செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. அவர்கள் சபையின் நலனுக்காக எச்சரிக்கையாயிருக்க வேண்டியதாயிருக்கிறது. அவர்கள் சபையின் செயல்பாடுகளை கண்காணிக்கிறார்கள். கண்காணிப்பு செய்ய என்பது "பார்க்க" அல்லது அல்லது சபையின் ஆவிக்குரிய தேவையின் மேல் கவனமாயிருக்க என்பதாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் சபைக்கு மேலாக மூப்பர்களை "கண்காணிகள்" ஆக்குகிறார் (அப்.20:28). கண்காணிப்பு செய்வதென்பது கட்டாயத்திற்காக அல்ல, மனப்பூர்வமாய் செய்யப்பட வேண்டும். அதாவது மூப்பர்கள் அவர்களுடைய விருப்பத்திற்குமாறாக நிர்பந்திக்கப்படாமல் கண்காணிகளாக இருப்பதை அவர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் கண்காணிப்பு செய்யும்விதமானது கட்டாயத்திற்காக அல்லது தன்னை பின்பற்றுகிறவர்களை நிர்பந்தம் செய்கிறதாக இருக்காது, ஆனால் அது அவர்களை விருப்பத்துடனே பின்பற்றும்படி வழிநடத்துகிறது. மூப்பர்களுடைய நோக்கங்களானது பணத்திற்காகவோ அல்லது முன்னுரிமை எடுத்துக்கொள் வதற்காகவோ இருக்கவேண்டாம் ஆனால் அது தேவனுக்குக் கீழ்ப்படியும்படியாக உற்சாகமான மனதுடனே இருக்க வேண்டும். எந்த ஒரு குழுவைச் சேர்ந்த ஒரு கண்காணியானாலும் ஒரு கனத்துக்குரிய பொறுப்புடையவனாக இருக்கிறார்கள். ஆனால் பிராந்திய சபைகளின் கண்காணிகள் சகல பொறுப்புகளிலும் மிகவும் கனத்துக்குரியவைகளை உடையவர்களாயிருக்கிறார்கள். பிரதான மேய்ப்பர் மந்தையின் நலனுக்காகவும், வேலைக்காகவும் அவர்களை பொறுப்புடையவர்களாக வைத்திருப்பார். அவர்கள் அவசியம் தங்கள் கடமையை மிகுந்த கவனத்துடனும் ஒரு சரியான ஆவியுடனும் சரியான நோக்கத்துடனும் நிறைவேற்றவேண்டும். இதுவே சபைக்கான கண்காணிப்பை செய்வதாக இருக்கிறது.

5. நன்றாய் விசாரணை செய்யுங்கள். பிராந்திய சபையை நன்றாக விசாரணை செய்வதும் மூப்பர்களின் கடமையாக இருக்கிறது (1தீமோ.5:17). இவ்வசனப்பகுதியானது விசாரணை செய்கிறவர்களை, "திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்கள்" என்று மேலும் விவரிக்கிறது. ஒரு மூப்பருடைய தகுதிகளை குறிப்பிடும் பொழுது வேதாகமம் "ஒருவன் தன் சொந்தக்குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்" (1தீமோ.3:5) என்கிறது. ஆகையால் சம்பந்தப்பட்ட பிராந்திய சபையை விசாரணை செய்வது என்பது பிராந்திய சபைக்காக உபதேசிப்பதில் பிரயாசப்படுவது என்பது ஒரு தகப்பனாயிருக்கிறவன் தன்னுடைய குடும்பத்தைக்குறித்து கவனமாயிருந்து பிரயாசப்படுவதைப் போன்று இருக்கிறது. விசாரணை செய்வது என்பது சபையின் மேல் ஒருவர் அதிகாரம் செலுத்துகிறதை அது குறிப்பிடுகிறதில்லை (1பேது.5:3). அது சபையின் நலனுக்காக பொறுப்பாயிருப்பதையும் அங்கத்தினர்களின் ஆவிக்குரிய விஷயங்களை ஒழுங்குபடுத்துவதுமாய் இருக்கிறது. ஒரு ஆளுகை செய்கிறவர் என்பதைக் குறித்து ஒரு

தவறான கருத்து உடையவர்களாக சில மனுஷர்கள் இருக்கிறார்கள். ஒரு ஆளுகை செய்கிறவர் கட்டாயம் தன்னுடைய குடிமக்களை தன்னுடைய அடிமைகள் ஆக்கிக்கொள்கிறது போல செயல்படவேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். சபையை ஆளுகிற மூப்பர்களைக் குறித்த வகையில் இது உண்மையல்ல. வேதாகமம், அவர்கள் விசாரணை செய்ய வேண்டியதாயிருக்கிறது என்று சொல்கிறது அதன் பொருள் என்னவென்றால், அவர்கள் சபையின் காரியங்களைக் குறித்து எச்சரிக்கை இல்லாதவர்களாக இருக்க கூடாது என்பதே. அவர்கள் ஆளுகை செய்கிற முக்கிய விஷயங்களை புறக்கணிக்கிறவர்களாக இராமல் அதற்கு பொறுப்பானவர்களாய் இருக்க வேண்டியதாயிருக்கிறது. ஒரு சிரத்தைக்குரிய கனமான பொறுப்புக்குரிய ஒரு பாதுகாக்கிறவராக அவர்கள் இருக்கிறார்கள். இந்த கட்டளையை நன்றாய் நிறைவேற்றுகிறவர்கள் "இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராயிருக்கிறார்கள்" ஏனென்றால் இந்த கடமையானது மிகவும் கனம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது (1தீமோ.5:17). கர்த்தருடைய சபையை நன்றாக ஆளுகை செய்யும்படி அல்லது இந்த விதமாக ஆளுகை செய்யும்படி கட்டளையிடப்பட்டு இருக்கிறது.

6. ஆத்துமாக்களுக்காக விழித்திருங்கள்: மூப்பர்களுக்கு கீழ்ப்படிந்து, அடங்கியிருக்க வேண்டும். ஏனென்றால்; "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே" (எபி.13:17). எல்லாவற்றிலும் மூப்பர்களுக்குரிய மிகவும் சிரத்தைக்குரிய கட்டளையாக அவர்கள் அங்கத்தினர்களின் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணி விழித்திருக்கிறவர்களாயிருக்க வேண்டும். இவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்காக அலங்கங்களின் மேலிருக்கிற காவலாளரைப் போலிருக்கிறார்கள். அவர்கள் காவல் செய்கிறவர்களாயிருந்து அவர்களுடைய சத்துருவைக் குறித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்யாவிட்டால் காவலாளருடைய கைகளிலே ஜனங்களுடைய இரத்தப்பழி கேட்கப்படும் (எசேக்.3:17-21). அவருடைய பொறுப்பில் விடப்பட்ட ஆத்துமாக்களுக்காக கணக்கு ஒப்புவிப்பதைப்பார்க்கிலும் எது மிகவும் அமைதியடையச் செய்யக்கூடியதாக இருக்கும்? மூப்பரானவர் விழித்திருக்கிறவராக மாத்திரம் அல்ல, அவர் தம்முடைய பொறுப்பில் இருக்கிற அங்கத்தினர்களின் ஆத்துமாக்களுக்காக கணக்கு ஒப்புவிக்கிறவராகவும் இருக்க வேண்டும். இவ்விதமான காவலுக்கு தொடர்ச்சியான விழித்திருத்தல் அவசியமானதாக இருக்கிறது (1பேது.5:8). இவ்விதமாக ஒவ்வொரு அங்கத்தினர்களுக்காக கண்ணீரோடே கூடிய இடைவிடாத விழித்திருத்தல் ஒரு மூப்பருக்கு அத்தியாவசியமானதாக இருக்கிறது.

**கேள்விகள்**

1. மூப்பர்களின் முன்மாதிரிக்கு 2 வசனங்களை வரிசைப்படுத்தவும் ----- -----
2. ஒரு மூப்பராக இருக்கிறவர் மந்தையை --------- அவர்களுக்காக -------
3. அங்கத்தினர்களுக்கு தேவையாயிருக்கிற 2 வகையான உணவுகளை கூறுங்கள் ----------- ------------
4. மந்தையை போஷிப்பது அல்லது உபதேசிப்பது என்பதும்; மந்தையை மேய்ப்பதும் ஒன்றாயிருக்கிறதா?
5. அரசாங்க ஆட்சியாளர்களைப் போன்று மூப்பர்கள் ஆளுகை செய்கிறார்களா? -----------
6. எந்த இரண்டு பதங்களிலிருந்து "கண்காணி" என்ற வார்த்தையானது உருவாக்கப்பட்டிருக்கிறது?
7. ஒரு மூப்பராய் இருக்கிறவர் தன்னுடைய-------------- விசாரணை செய்கிறது போல சபையை விசாரணை செய்ய வேண்டும்.
8. "விழித்திருத்தல்" என்பதற்கான 4 வசனக்குறிப்புகளை வரிசைப்படுத்துக
9. மேய்ப்பனானவன் மந்தையை வழிநடத்தினபடியால் அவனுடைய வசிப்பிடம் என்னவாக இருந்தது?
10. "கண்காணிப்பு செய்ய" என்று பொருள்படும் மற்றொரு வார்த்தையை அளிக்கவும்.

பெண்கள் பகுதி

## சிப்பிராள் பூவாள்

## Shiphrah and Puah

*-Glory Arjunan*



வேதாகமத்தை வாசிக்கும் ஒவ்வொரு ஸ்திரீக்கும் இந்த சிப்பிராள் பூவாள் பற்றி நன்கு தெரிந்திருக்கும். இந்த இரு ஸ்திரீகளும் எகிப்து தேசத்திலிருந்த எபிரெய மருத்துவச்சிகள். இவர்களைக் குறித்து யாத்திராகமம் புத்தகத்தில் 1ம் அதிகாரம், 15ம் வசனம் முதல் 22 ம் வசனமுடைய உள்ள பகுதியில் வாசிக்க முடியும். இந்த எபிரெய மருத்துவச்சிகள் நீதி மற்றும் தேவனுக்குப் பயப்படும் பயம் குறித்த மிக முக்கியமான பாடத்தினை நமக்குக் கற்பிக்கின்றனர்.

**முதலாவதாக,** நாம் மனுஷனுக்குப் பயப்படுவதைக் காட்டிலும் **தேவனுக்குப் பயப்படுதே அவசியமாயிருக்கிறது** என்ற பாடத்தினை இவர்களுடைய கிரியைகளிலிருந்து கற்றுக்கொள்ளலாம். இவர்கள் இருவரும் எகிப்தின் ராஜாவின் அதிகாரத்தின் கீழ் வாழ்ந்து வந்தனர். அங்கே "...எகிப்தின் ராஜா, சிப்பிராள் பூவாள் என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகளோடே பேசி, நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும்போது, அவர்கள் மனையின்மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து, ஆண்பிள்ளையானால் கொன்று போடுங்கள், பெண்பிள்ளையானால் உயிரோடிருக்கட்டும் என்றான்" (யாத்.1:15-16). ஆனால், "மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்" (யாத்.1:17. எத்தனை துணிச்சல் இவர்களுக்கு! நாட்டை ஆளும் அதிகாரத்துக்கு கீழ்ப்படியவில்லையென்றால் தண்டனைக்கு ஆளாக வேண்டுமே! தங்களுடைய ஜீவனைக் குறித்து கவலைப்படவில்லை. காரணம், இவர்கள் தேவனுக்குப் பயந்ததினால் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை.

இவர்களைப்போல வேதாகமத்தில் அநேகர் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் தேவனுக்குப் பயந்து தேவனை மகிமைப்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக தானியேல், சாத்ராக், மேசாக், ஆபேத்நெகோ மற்றும் எஸ்தர் இப்படி இன்னும் அநேக தேவப்பிள்ளைகள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வெற்றி சிறந்தனர். அன்பு சகோதரிகளே, நீங்களும் நானும் எப்படியிருக்கிறோம்? உலகத்தின் ஆசீர்வாதங்களுக்காக அல்லது நம் ஜீவனைத் தப்புவித்துக்கொள்ளும்படி வாழ்கின்றோமா? புதிய ஏற்பாட்டு காலத்தில் கிறிஸ்துவின் உபதேசத்தையும், அவருடைய நாமத்தையும் குறித்துப் போதகம் பண்ணக்கூடாது என்று கட்டளையிடப்பட்ட அப்போஸ்தலர்கள் பயப்படவில்லை. துணிச்சலோடே இயேசுவின் நாமத்தைக் குறித்து பிரசங்கித்தார்கள். "அதற்கு பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (அப்.5:28,29) என்று சொல்லி நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும்

பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை (இயேசுவை) அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்" (அப்.5:30,31) என்று பயமில்லாமல் பிரசங்கித்தார்கள். மேலும் "....தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்" (அப்.4:19) என்றனர். ஆம், அன்றே இவ்விதமாக சிப்பிராளும் பூவாளும் தேவனுக்கு விரோதமாக செயல்படாமல் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் தேவனுக்குப் பயந்ததினால் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை.

**இரண்டாவது** இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளப்போகிற பாடம் என்னவென்றால் **"உயிரின் மதிப்பை அறிந்திருந்தனர்"** இஸ்ரவேல் ஸ்திரீகளையும் அவர்கள் பிள்ளைகளையும் காப்பாற்றும்படி தங்கள் வாழ்வைப் பற்றி கவலை கொள்ளாமல் தங்கள் வாயைத் திறந்தனர். "ஊமையனுக்காவும் திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்துக்காகவும் உன் வாயைத் திற" (நீதி.31:8) என்று வேதம் கூறுகிறது. அன்றைய நாளில் இஸ்ரவேலர்கள் எகிப்தின் ராஜாவுக்கு அடிமைகளாகவும், தங்களுடைய உரிமைகளுக்காக வாய்திறவாத ஊமையாரைப்போலவும் கொடுமைப்படுத்தப்பட்டவர்களாகவும் தான் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய ஜீவன் அற்பமாக எண்ணப்பட்டது. ஆனால் மருத்துவச்சிகளோ அவர்களுடைய ஆண்பிள்ளைகளைக் காப்பாற்றினார்கள். ஓர் உயிரின் மதிப்பை அறிந்திருந்தனர். ஒருவேளை ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து எபிரெய ஸ்திரீகளுக்குப் பிறந்த ஆண் பிள்ளைகளையெல்லாம் கொன்று போட்டிருந்தால் அது தேவனுடைய பார்வையில் கொலை குற்றமல்லவா! இன்றைய நாட்களில் அநேக தாய்மார்கள் கூட தங்கள் கர்ப்பத்தில் உருவாகி வளர்ந்துவருகின்ற சிசுவையும் பிறந்த குழந்தைகளையும் கொன்றுபோட துணிந்து விட்டனர். ஒரு குழந்தை கர்ப்பதில் உருவாகும்போதே அதற்கு ஜீவன் உண்டு. அந்த ஜீவன் தேவனால் கொடுக்கப்பட்டது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதி.2:7) என்று வாசிக்கிறோம். தேவனிடத்திலிருந்து வந்த அநத் ஜீவனை கொலைசெய்ய, அந்த ஜீவனைப் பெற்று வாழ்ந்து வருகிற ஒரு தனி நபருக்கேகூட அதைக் கொன்றுபோட அதிகாரமில்லை என்பதை அறிவீர்களா? ஒரு ஜீவனின் மதிப்பை அறிந்திருந்த இந்த மருத்துவச்சிகள் ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள். "அதினால் எகிப்தின் ராஜா மருத்துவச்சிகளை அழைப்பித்து: நீங்கள் ஆண்பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றுகிற காரியம் என்ன என்று கேட்டான். அதற்கு மருத்துவச்சிகள் பார்வோனை நோக்கி: எபிரெய ஸ்திரீகள் எகிப்திய ஸ்திரீகளைப்போல அல்ல, அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள்; மருத்துவச்சி அவர்களிடத்துக்குப் போகுமுன்னமே அவர்கள் பிரசவித்தாகும் என்றார்கள்" (யாத்.1:18,19) என்ன அற்புதமான பதில் இது! தாவீது சங்கீதம் 139:14,16 ல் இவ்விதமாகக் கூறுகிறான். "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்;.. உமது கிரியைகள் அதிசயமானவைகள்; அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். .....என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது" என்றான். ஒவ்வொரு ஜீவனும்

தேவனுடைய கரத்தின் கிரியை என்பதை இந்த மருத்துவச்சிகள் அறிந்திருந்தனர் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. எனவே தேவனுக்குப் பயந்து இந்த பொல்லாப்பை செய்யாதிருந்ததோடே அல்லாமல் ராஜாவினிடமும் துணிச்சலாக பதிலளித்தனர். இது இவர்களுடைய நீதியை வெளிப்படுத்துகிறதில்லையா?


**மூன்றாவதாக,** நாம் கற்றுக்கொள்ள வேண்டியது, **"தேவன் நம் எண்ணங்களையும் கிரியைகளையும் காண்கிறார்"** என்பதே. ஆம், நம் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறார் அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை ".... இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" (ரோம.8:27). மேலும் "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" எரேமியாவும் கூட "கர்த்தாவே, நீர் என்னை அறிந்திருக்கிறீர், என்னைக் காண்கிறீர்; என் இருதயம் உமக்கு முன்பாக எப்படிப்பட்டதென்று சோதித்து அறிகிறீர்; ..." (எரே.12:3) என்று எழுதியிருக்கிறான். எபிரெய மருத்துவச்சிகள் வாழ்ந்த காலம் வேறு, தாவீது மற்றும் எரேமியா போன்றவர்கள் வாழ்ந்த காலம் வேறு. இருந்தபோதிலும் பரிசுத்த ஆவியானவர் தாமே இந்த ஸ்திரீகளின் இருதயங்களை தமக்கேற்றபடி திருப்பியிருக்கிறார். இவர்களும் தேவன் தங்களைக் காண்கிற தேவன் என்பதை அறிந்தவர்களாக தேவனுக்குப் பயந்து கிரியை நடப்பித்துள்ளனர். எனவே தான், "இதினிமித்தம் தேவன் மருத்துவச் சிகளுக்கு நன்மை செய்தார். ஜனங்கள் பெருகி மிகுதியும் பலத்துப்போனார்கள். மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார். எப்பேர்பட்ட ஆசீர்வாதம் இது! நம்முடைய குடும்பங்களும் தழைக்க வேண்டுமானால் தேவனுக்குப் பயந்து, நீதியை நடப்பிப்போம். தேவனுக்குப் பயப்படுவதுமாத்திரமல்ல, தேவனுக்கேற்ற கிரியை களையும் நடப்பிக்கவேண்டும். அநேகர் தேவனுக்குப் பயப்படுவார்கள். ஐயோ, தேவனுக்குப் பயப்படாவிட்டால் நமக்குத் தீமை வந்துவிடுமோ என்ற எண்ணத்தில் பயப்படுவார்கள். அப்படியல்ல அன்பு சகோதரியே, யாக்கோபு 2:19 ல் "...பிசாசுகளும் விசுவாசத்து நடுங்குகிறது" என்று எழுதப்பட்டுள்ளது."ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக்.2:24). இந்த ஸ்திரீகளும் கூட தேவனுக்குப் பயந்ததோடல்லாமல் கிரியையினாலே நீதியான காரியங்களை வெளிப்படுத்தினார்கள். தேவன் எல்லாவற்றையும் காண்கிறார்.

அன்பு சகோதரிகளே, நாமும் இந்த எபிரெய மருத்துவச்சிகளைப்போல தேவனுக்குப் பயந்து நடப்போம் மனுஷனுக்குப் பயப்படுவதைக் காட்டிலும் தேவனுக்குப் பயப்படுவதே உத்தமம். இந்த கடைசி காலத்தில் கர்த்தருக்கு எதிராக எழும் அதிகாரங்களுக்குப் பயப்படாமல் நம்மை உண்டாக்கின தேவாதி தேவனுக்கே பயந்து, அவருடைய குமாரனின் சுவிசேஷமாகிய நற்செய்தியை அறிவிக்கப் பிரயாசப்படுவோம். சகல அதிகாரமும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. நாம் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்பட, நம் குடும்பங்கள் தழைக்க இயேசுவின் கட்டளையை நிறை வேற்றுவோமாக! கர்த்தர் தாமே நம்மோடிருந்து கிரியை நடப்பிக்க ஜெபிக்கிறேன். ஆமென்.

சிறுவர் பகுதி

# நோவா - Noah

வேத பகுதி:
ஆதியாகமம்6:1-24




கர்த்தருக்குள் பிரியமான பிள்ளைகளே தேவன் ஆதியிலே பூமியை உருவாக்கி மனுஷன் உள்ளிட்ட ஜீவ ஜந்துக்களை உருவாக்கினார். விசேஷமாக மனுஷனை தம்முடைய சாயலின் படி உருவாக்கினார். மனுஷர்கள் பூமியிலே பலுகிப்பெருகினபோது அவர்களோடே அக்கிரமமும் பெருகிற்று. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் பூமியை நோக்கிப்பார்த்தார். அப்பொழுது, "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாகினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதியாகமம் 6:5,6). இப்படிப்பட்ட அக்கிரமம் நிறைந்த ஜனங்கள் மத்தியில் ஒரு நீதிமான் காணப்பட்டான். அவன்தான் நோவா. "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்" (ஆதியாகமம்6:9).

நீங்கள் இந்த நோவாவைப்போல வாழ ஆசைப்படுகிறீர்களா? அல்லது அங்கே துன்மார்க்கமாக வாழ்ந்து தேவனுக்கு மனஸ்தாபத்தைக் கொண்டு வந்த ஜனங்களைப்போல வாழ ஆசைப்படுகிறீர்களா? நோவாவைப்போல வாழுவோமென்றால் கர்த்தருடைய கண்களில் தயையைப் பெற்றுக்கொள்வோம். நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அருமையான தம்பி, தங்கைகளே நீங்களும் அப்படியிருப்பீர்களா? அப்பா, அம்மா, நண்பர்கள், மற்றும் உறவினர்களிடம் பொய்சொல்லாமல் உண்மையாயிருப்பீர்களா? இந்த நோவா அப்படியிருந்தபடியால் அழிவிலிருந்து காக்கப்பட்டான். தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடித்தான். என்னால் இதை செய்யமுடியாது தேவனே என்று அவன் தேவனை நோக்கி முறையிடவில்லை. நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு என்றார். அந்தப்படியாக நோவா செய்தான். நேவாவுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள். பக்தியுள்ள பெற்றோரின் வார்த்தைக்குக் கீழ்ப்படியும் போது நாமும்கூட காக்கப்படுவோம். இந்த உலக அழிவிலிருந்து காக்கப்பட கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுப்போம்!



**மனப்பாட வசனம்**

"நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" (ஆதியாகமம்6:8).

**வேத பகுதி: 2இராஜாக்கள்5:1-14**

*நடப்புச் செய்திகள்*

- 63.32 கோடியை தாண்டியது உலக கொரோனா பாதிப்பு
- வாரமொரு முறை காளான் சாப்பிட்டால் எந்த பிரச்சனையும் வராது
- இந்த ஆண்டு TASMAC ரூ.460 கோடியை தாண்டியது

## வேத அறிவுப் போட்டி எண்: 267

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவனுடைய தலைமயிர் சிரைக்கப்பட்ட பின்பு, திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று?
2. தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. தான் திருப்தியாய்ச் சாப்பிட்டு மீதியாக வைத்ததை எடுத்து தன் மாமிக்கு கொடுத்தவள் யார்?
4. நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. ஒரு பராக்கிரமசாலியையாகிலும் ஒரு பலசாலியையாகிலும் காணும்போது அவர்கள் எல்லாரையும் தன்னிடமாக சேர்த்துக்கொண்ட ராஜா யார்?
6. நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. எவன் தாவீதை தூஷித்து இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்துபோ என்றான்?
8. கிறிஸ்து இயேசுவிலிருந்து சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது என்பது சரியா?
9. சகல கிழக்கத்திய புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்ததா?
10. மாற்கு பர்னபாவுக்கு இனந்தானா?

## வேதாகம ஆய்வு... 51

## ஓசியா
## Hosea



1. **பெயேரியின் குமாரன் – ஓசியா 1:1**
2. **யூதாதேசத்து ராஜாக்களின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தான். ஓசியா என்றால் இரட்சிப்பு என அர்த்தம்.**
3. **எப்பிராயீமரின் பாவம் – ஓசியா 8:12**
4. **இஸ்ரவேல் கோவில்களை கட்டுகிறான் – ஓசியா 8:14**
5. **இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு – ஓசியா 14:1**

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
November 2022

# சென்னை திருவல்லிக்கேணி கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெற்ற இரண்டு நாள் கூட்டம்



"சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்" (2தீமோத்தேயு 1:4)

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program: All Days of the Week

Every Monday & Wednesday 6.00 P.M on Joy TV
Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Ever Friday 6.00 P.M on Channel 316 TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube : the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

love God
love people
be a servant

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan